## ஒன்றிய அரசிடமிருந்து தமிழ்நாட்டின் உரிமைகளை நாம் காப்பது காலத்தின் கட்டாயம்!

# வருகின்ற தேர்தல் டெல்லிக்கும் தமிழ்நாட்டுக்குமான தேர்தல் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயலாற்றுங்கள்!

## தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் சந்திப்பில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!




தூத்துக்குடி,மார்ச்.9 -

**தூத்துக்குடியில், தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகளுக்கான சந்திப்பு மற்றும் ஆலோசனைக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு எழுச்சிமிகு உரையாற்றினார்.**

**அப்போது அவர், ``வருகின்ற தேர்தல் டெல்லிக்கும் தமிழ்நாட்டுக்கும் நடக்கின்ற ஒரு தேர்தல். இதில் நாம் தமிழ்நாட்டைக் காப்பாற்றியே ஆக வேண்டியது காலத்தின் கட்டாயம். நாம் அடுத்த 40 நாட்கள் நாம் செய்கின்ற களப்பணிகளின் வாயிலாகத்தான், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குத் தமிழ்நாட்டின் உரிமைகளை நாம் காப்பாற்ற முடியும். எனவே, இங்கே வந்திருக்கும் சார்பு அணி நிர்வாகிகளான உங்களிடம் கேட்டுக்கொள்வது, அடுத்த 40 நாட்கள் களத்தில் இருந்து தொடர்ந்து செயலாற்றுங்கள் என்பதுதான்" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிகு உரை வருமாறு:**

இன்று தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக அனைத்துச் சார்பு அணிகளின் நிர்வாகிகளான உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த மூன்று நாட்களாகத் தொடர் சுற்றுப்பயணம். நேற்று முன்தினம் சென்னையிலிருந்து கிளம்பி, தஞ்சை, மதுரை, அதன்பிறகு தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகியவற்றை எல்லாம் முடித்துவிட்டு, நேற்று நள்ளிரவுதான் உங்களின் தூத்துக்குடிக்கு வந்திருக்கிறேன்.

### ஓர் உற்சாகம் ஓர் ஆற்றல்

தொடர் பிரச்சாரம், தொடர் சுற்றுப்பயணத்தினால் கொஞ்சம் சோர்வாக இருந்தேன். இருந்தாலும் அந்தச் சோர்விலும் எனக்கு ஆற்றலைக் கொடுப்பது இந்த மாதிரி கழகத்தின் சார்பு அணி நிர்வாகிகள், கலைஞரின் இரத்தத்தின் இரத்தமாகிய உங்களை எல்லாம் சந்திக்கும்போது, `பூஸ்ட்' உட்கொண்டது போன்ற ஓர் உற்சாகம் ஓர் ஆற்றல் தானாகவே கிடைக்கிறது. அதுதான் என்னைத் தொடர்ந்து பயணம் செய்ய வைத்துப் பேச வைக்கிறது.

முதலில் இந்த நிகழ்ச்சியை இரண்டு நாட்களுக்கு முன்புதான் முடிவு செய்தோம். இந்த நிகழ்ச்சியை இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், அக்கா கீதா ஜீவன் அவர்களுக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வெற்றி மேல் வெற்றி

இன்று நம் கழகம் 76-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்து நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. தி.மு.க-வுக்கு வயது 76. இந்த 76 வயதிலும் இன்றும் அதே துடிப்புடன், அதே உணர்ச்சியுடன், உத்வேகத்துடன், இளமையுடன் இன்னும் நாம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம் என்றால், அந்த இயக்கத்தின் வெற்றிக்காக உழைத்த சார்பு அணிகளாகிய நீங்கள்தான் மிக மிக முக்கியமான ஒரு காரணம்.

யூத் விங், ஸ்டூடண்ட் விங், ஐ.டி விங் என்று கூறிவிடுகிறோம். எல்லா அணிகளையும் குறிப்பிடுவோம். 'விங்' என்றால் சிறகு என்று அர்த்தம். இன்று கழகம் வெற்றி மேல் வெற்றி பெற்று, அது உயர உயரப் பறந்துகொண்டே இருக்கிறது என்றால், அந்தச் சிறகுகளாக இருக்கக்கூடிய நீங்கள்தான், உங்களின் உழைப்புதான் இன்று கழகத்தை இவ்வளவு பெரிய வெற்றிக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால் சார்பு அணி என்பது தாய்க் கழகத்துக்குச் செல்வதற்கு முன்பாக நமக்குப் பயிற்சி கொடுப்பார்கள், `நெட் பிராக்டிஸ்' (Net Practice) கொடுப்பார்கள். அதுபோலத் தாய்க்கழகத்துக்குச் செல்வதற்கு முன்பு நமக்கு உரிய ஒரு பயிற்சிக் களம்தான் இந்தச் சார்பு அணிகள்.

சார்பு அணிகளில் சிறப்பாக உழைத்த பல பேர் இன்று மாவட்டக் கழகப் பொறுப்பாளர்களாக, மாவட்டச் செயலாளர்களாக, அமைச்சர்களாக, சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, மக்கள் பிரதிநிதிகளாக இன்று பல்வேறு பொறுப்புகளில் இருக்கிறார்கள். ஏன், இன்று தமிழ்நாட்டின் முதலமைச்சரை, கழகத்தின் தலைவரைக் கொடுத்தது கழகத்தின் இளைஞர் அணிதான். கழகத்தின் பொதுச்செயலாளரைக் கொடுத்தது கழகத்தின் மாணவர் அணிதான்.

### ஒவ்வொரு அணிக்கும் ஒரு வரலாறு

பொதுவாக ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் ஒரு வரலாறு இருக்கும். ஆனால் தி.மு.க-வில் மட்டும்தான் ஒவ்வொரு அணிக்குமே ஒரு வரலாறு உண்டு. மாணவர் அணி என்று எடுத்துக் கொண்டீர்கள் என்றால், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை மாணவர் அணியைக் குறிப்பிடாமல், அதைப் பற்றி நாம் பேசவே முடியாது. அதுபோல இளைஞர் அணிக்கு ஒரு வரலாறு உண்டு. இன்று இந்தியாவில் பல்வேறு இயக்கங்கள், எல்லா இயக்கங்களிலும் இளைஞர் அணி இருக்கிறது. ஆனால், இந்தியாவிலேயே முதல்முறையாக ஓர் இயக்கத்துக்கு இளைஞர் அணி ஒன்று தொடங்கப்பட்டது என்றால், அது தி.மு.க-வின் இளைஞர் அணிதான். அதைத் தொடங்கியது நம் கழகத் தலைவர் அவர்கள்.

இப்படி ஒவ்வொரு அணிக்கும் ஒரு பின்னணி உண்டு. சட்டத்துறை அணியை எடுத்துக் கொண்டீர்கள் என்றால் இன்று இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு முக்கியமான தீர்ப்புகளை எல்லாம் வாங்கிக் கொடுத்தது நம் சட்டத்துறை அணியாகத்தான் இருக்கும். அப்படிப்பட்ட அணிகளில் ஒரு உறுப்பினராக இருப்பது, ஒரு நிர்வாகியாக இருப்பது நமக்கெல்லாம் உண்மையில் மிகப்பெரிய பெருமை.

### உங்களுக்கான அங்கீகாரம்

நான் உங்களிடம் ஒரேயொரு வாக்குறுதி மட்டும் கொடுக்கிறேன். சார்பு அணிகளில் நாம் எந்தப் பிரதிபலனும் பார்க்காமல் நம் உழைப்பைக் கொடுத்தோம் என்றால், சரியான தருணத்தில் உங்களுக்கான அங்கீகாரத்தை நம் தலைவர் அவர்கள் நிச்சயமாக உங்களுக்குப் பெற்றுத் தருவார். நான் உங்களிடம் சொல்வதெல்லாம், நீங்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் உங்களின் தனிப்பட்ட செல்வாக்கு மூலமாக, உங்களின் தனிப்பட்ட நன்னடத்தையின் மூலமாக, உங்களின் தொடர்பின் மூலமாக, உங்களை ஒரு 'செல்வாக்கு உள்ளவராக' ஏற்று ஒரு 50 பேர், 60 பேர் உங்களின் கட்டுப்பாட்டில் நீங்கள் வைத்திருந்தால், உங்களின் உயர்வை யாரும் தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாது. சார்பு என்று சொல்வதனால் நாம் ஏதோ தாய்க்க ழகத்ட்தின் மீது சார்ந்து இருக்கிறோம் என்று அர்த்தம் கிடையாது. கழகம் தான் நம் அணியை சார்ந்து இருக்கிறது, என்று நாம் அதை மாற்றிக் காட்ட வேண்டும்.

இன்று நம் முதலமைச்சர் அவர்கள் கடந்த ஐந்தாண்டுகளாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் எவ்வளவோ திட்டங்களைச் செய்து முடித்திருக்கிறார். தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டங்களையும் செய்து முடித்திருக்கிறார். சொல்லாத பல திட்டங்களையும் செய்து முடித்திருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். அதில் சில திட்டங்களை மட்டும், இங்கே உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். குறிப்பாக மகளிருக்கான ஏகப்பட்ட திட்டங்கள்.

### 960 கோடி பயணங்கள்

ஆட்சிப் பொறுப்பேற்று நம் முதலமைச்சர் அவர்கள் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான அந்த 'விடியல் பயணத் திட்டம்'. இன்று பார்த்தீர்கள் என்றால், இந்த ஐந்து ஆண்டுகளில் 960 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளார்கள். அதுதான் அந்தத் திட்டத்தின் வெற்றி. இன்று மற்ற மாநிலங்கள் எல்லாம் இந்தத் திட்டத்தைப் பார்த்து அவர்களின் மாநிலங்களில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பள்ளிக் குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டம். இன்று நம் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தில் அரசுப் பள்ளியில் பயிலும் 22 லட்சம் குழந்தைகளுக்குத் தினமும் பள்ளிக்கூடத்துக்குச் சென்றால், முதலில் தரமான உணவு, அதன் பிறகு தரமான கல்வி. இன்று பல்வேறு மாநிலங்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் நம் தேர்தல் அறிக்கையில் சொல்லப்படாத திட்டம். தேர்தல் அறிக்கையில் சொல்லாத திட்டத்தை நம் தலைவர் நிறைவேற்றியிருக்கிறார்.

இப்படிப் பல்வேறு திட்டங்கள். உதாரணமாக 'நான் முதல்வன்' திட்டம். முதலமைச்சரின் பிறந்த நாளில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு முதலமைச்சர் அறிமுகப்படுத்தினார் 'நான் முதல்வன்' திட்டம். இன்று பார்த்தீர்கள் என்றால், நேற்று செய்தித்தாளில் படித்திருப்பீர்கள். தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள். ஒன்றிய அரசு நடத்துகின்ற யூ.பி.எஸ்.சி. (UPSC) தேர்வுக்கு இந்த முறை தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். அதாவது 10 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு பேர் அகில இந்தியத் தரவரிசையில் (All India Rank) முதல் 10 இடங்களில் நம் தமிழ்நாட்டு மாணவர்கள் இடம் பிடித்திருக்கிறார்கள். அந்த இரண்டு பேருமே நம் `நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் பயன்பெற்றிருக்கிறார்கள்.

### 10 லட்சம் மடிக்கணினிகள்

இரண்டாம் இடம் பெற்ற தங்கை ராஜேஸ்வரி, தமிழ்நாடு அரசு நடத்தி வருகின்ற விடுதியில் 'நான் முதல்வன்' பயிற்சியில், பயிற்சி பெற்றுச் சென்று தேர்வு எழுதி இன்று இவ்வளவு பெரிய ஒரு சாதனையைப் படைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்த முறை 10 லட்சம் மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தை ஒரே ஆண்டில் நம் முதலமைச்சர் கொடுத்திருக்கிறார்.

ஏற்கனவே கொடுக்கப்பட்ட திட்டம் என்று சொல்வார்கள், நிறுத்தினார்கள் என்று சொல்லுவார்கள். நாம் நிறுத்தவில்லை. அ.தி.மு.க ஆட்சியில் 2019-ஆம் ஆண்டு அந்தத் திட்டத்தை நிறுத்திவிட்டார்கள். அதன் பிறகு, நாம் ஆட்சிக்கு வந்த பிறகு சென்ற நிதியாண்டில் இதற்கான நிதியை ஒதுக்கி, கொடுத்து வருகிறோம். இன்று நம் முதலமைச்சர் அவர்கள் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியருக்குக் கொடுத்து வருகிறார்கள். சென்ற முறை அ.தி.மு.க ஆட்சியில் 11-ஆம் வகுப்பு, 12-ஆம் வகுப்புக்குக் கொடுத்தார்கள். ஆனால் அதன் நிலைமை என்னவென்று உங்களுக்குத் தெரியும், நிறையப் பேர் பயன்படுத்தவே இல்லை. ஆனால் நம் தலைவர் அவர்கள் உண்மையாக யாருக்குப் பயன்படும், கல்லூரி இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு, இறுதி ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு இது இன்னும் அதிகம் பயன்படும் என்று சொல்லி, இன்று 10 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினியை நாம் 99 விழுக்காடு கொடுத்து முடித்துவிட்டோம். நம் தலைவர் கொடுத்துவிட்டார். இப்படிப் பல்வேறு திட்டங்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ஒரு கோடியே 32 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் நம் முதலமைச்சர் கொடுத்திருக்கிறார். அதுமட்டுமல்ல, முதலமைச்சர் இன்னொரு வாக்குறுதியை கொடுத்திருக்கிறார். மீண்டும் நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்த உடனே, `1,000 ரூபாயை உயர்த்தி 2,000 ரூபாயாக நான் கொடுப்பேன்' என்கிற வாக்குறுதியைக் கொடுத்துவிட்டார். நம் முதலமைச்சர் சொன்னதை நிச்சயமாகச் செய்வார் என்கிற நம்பிக்கை, தமிழ்நாட்டு மக்களுக்கு உண்டு.

அதுமட்டுமல்ல, கடந்த பிப்ரவரி மாதம் 13-ஆம் தேதி, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மகளிர், ஒரு கோடியே 32 லட்சம் மகளிருக்கு ஒரு மிகப்பெரிய வியப்பை நம் முதலமைச்சர் கொடுத்தார். மகளிருக்கு வியப்பு, எதிர்க்கட்சிகளுக்கு மிகப்பெரிய அதிர்ச்சி. திடீரென்று காலையில் 6 மணிக்கு எழுந்து பார்த்தால் அனைவரின் வங்கிக் கணக்கிலும் 5,000 ரூபாய். பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதம் சேர்த்து 3,000, அதோடு சேர்த்து கோடைகால சிறப்பு நிதி ரூ. 2,000.

நம் தலைவர் 7 மணிக்கு வங்கி கணக்கில் செலுத்தினார். ஆனால் நம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மகளிர் எல்லாம் 9 மணிக்கே சென்று வங்கியில் இருந்து எடுத்துவிட்டார்கள். இதுதான் நம் திராவிட மாடல் அரசுக்கும், பாசிச பா.ஜ.க ஆட்சிக்கும் உள்ள வித்தியாசம். மகளிருக்கு பா.ஜ.க மேல் அவ்வளவு நம்பிக்கை. ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி 'குறைந்தபட்ச இருப்பு' (Minimum Balance) என்று சொல்லி அந்த 5,000-ஐயும் எடுத்துவிடுவார்கள் என்று நினைத்துத்தான் நம் மகளிர் சென்று தெளிவாகக் காலையிலேயே எடுத்துவிட்டார்கள்.

### மிகுந்த மகிழ்ச்சியுடன் மக்கள்

இப்போது மூன்று நாட்களுக்கு முன்பு விளிம்பு நிலையில், இருக்கக்கூடிய மக்கள் 38 லட்சம் பேருக்கு, மாற்றுத்திறனாளிகள், கைம்பெண்கள், முதியோர்கள் அத்தனை பேருக்கும் 2,000 ரூபாய் நம் முதலமைச்சர் அவர்கள் சிறப்பு நிதியாகக் கொடுத்திருக்கிறார்கள். அதனால்தான் இன்று தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மக்களும் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள்.

நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களால் பயன்பெறாத ஒரு பயனாளி கூட கிடையாது. ஒரு குடும்பத்தில் நிச்சயமாக ஒரு பயனாளி ஏதாவது ஒரு திட்டத்தில் நிச்சயமாகப் பயனடைந்திருப்பார். இவற்றையெல்லாம் நீங்கள் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். இன்றுகூட தூத்துக்குடியில் இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்பு 136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் `சூப்பர் ஸ்பெஷாலிட்டி' மருத்துவமனையைத் திறந்து வைத்திருக்கிறேன். திருச்செந்தூரில் 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகப்பேறு பிரிவு அதைத் திறந்து வைத்திருக்கிறேன்.

### ரூ.102 கோடி மதிப்பீட்டில் 2,350 வீடுகள்

தூத்துக்குடி மாவட்டத்தில் 2023-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில் வீடுகளை இழந்தவர்களுக்கு ரூ.102 கோடி மதிப்பீட்டில் 2,350 வீடுகள் முழுமையாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அதுபோகச் சேதமடைந்த கிட்டத்தட்ட 500 வீடுகள் அவர்களுக்கும் அந்தப் புதுப்பித்தல் கட்டணத்தையும் படிப்படியாக நம் அரசு கொடுத்துக்கொண்டு இருக்கிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் 431 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 4 லட்சம் பயனாளிகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெறுகிறார்கள். திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலில் சுமார் 306 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வளாகம் மற்றும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் `டைடல் பூங்கா' அமைக்கப்பட்டிருக்கிறது.

உடன்குடியில் 14,000 கோடி மதிப்பீட்டில் அனல்மின் நிலையம் கட்டப்பட்டு வருகிறது. இப்படி இந்த மாவட்டத்துக்கும் பல்வேறு திட்டங்களை நம் அரசு செய்திருக்கிறது.

இப்படிப் பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து செய்வதால்தான் இன்று நம் தமிழ்நாடு இந்தியாவிலேயே வளர்ந்து வருகின்ற மாநிலங்களில் முதல் இடத்தில், முதல் முறையாக இரட்டை இலக்க வளர்ச்சி, 11.19 விழுக்காடு வளர்ச்சியுடன் இன்று இந்தியாவிலேயே `நம்பர் ஒன்' மாநிலமாக இன்று தமிழ்நாடு இடம் பிடித்திருக்கிறது.

இவற்றையெல்லாம் பார்த்துப் பொறுக்க முடியாத சங்கிகள் நாம் தமிழ்நாட்டுக்கு எதுவுமே செய்வது இல்லை, ஆனால், எப்படி இவ்வளவு சாதனைகள் செய்கிறார்கள் என்று பொறாமைப்படுகிறார்கள். எப்படியாவது ஏதாவது ஓர் இடையூறு கொடுக்க வேண்டும் என்று பல்வேறு வகைகளில், வழிகளில் முயற்சி செய்கிறார்கள்.

### மீண்டும் குலக்கல்வித் திட்டம்

நிதி உரிமையைத் தடுத்து நிறுத்துகிறார்கள். மொழி உரிமையைப் பறிக்கிறார்கள். மாநில உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறிக்கப் பார்க்கிறார்கள். உதாரணமாகப் புதிய கல்விக் கொள்கையை சென்ற ஆண்டு ஒன்றிய அரசு கொண்டு வந்தார்கள். மற்ற மாநிலங்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டன. ஆனால் தமிழ்நாடு ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டோம். ஏன், முதலமைச்சர் பார்த்தார், அதிகாரிகளை அழைத்துக் கேட்டார், ``இந்த புதிய கல்விக் கொள்கையில் என்னென்ன இருக்கிறது?". ``ஐயா, இந்த புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வந்தோம் என்றால், செயல்படுத்தினோம் என்றால், மீண்டும் இருமொழிக் கொள்கை கிடையாது, மும்மொழிக் கொள்கை. மீண்டும் இந்தியையும் சமஸ்கிருதத்தையும் நம் குழந்தைகள் மேல் திணிக்கப் போகிறார்கள். மீண்டும் குலக்கல்வித் திட்டத்தை இந்தப் புதிய கல்விக் கொள்கை மூலமாகத் திணிக்க முயற்சி செய்கிறார்கள்" எனச் சொல்லிவிட்டார்கள்.

ஒன்றிய அரசு நமக்குக் கொடுக்க வேண்டிய இந்த ஆண்டின் நிதியோடு சேர்த்து 3,500 கோடி ரூபாய் தர முடியாது என்று கூறிவிட்டார்கள். அதுவும் நாம் கொடுத்த பணம், நிதிப் பகிர்வு, ஒன்றிய அரசு ஒவ்வொரு மாநிலத்துக்கும் கொடுக்க வேண்டிய பணம் கல்விக்கான நிதி. 3,500 கோடி கொடுக்கவில்லை. ஒன்றிய அமைச்சர் சொல்லிவிட்டார், ``எல்லா மாநிலங்களும் ஏற்றுக்கொண்டன, தமிழ்நாடு மட்டும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக்கொண்டால்தான் கொடுப்போம்" என்று ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் சொன்னார். நம் முதலமைச்சர் சொன்னார், ``நீ 3,500 கோடி கிடையாது, நீ 10,000 கோடி கொடுக்கிறேன் என்று சொன்னாலும் எந்த நாளிலும் என் தமிழ்நாட்டு மக்கள் மேல் நான் மீண்டும் இந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணிக்க விடமாட்டேன். எந்த காலத்திலும் மீண்டும் குலக்கல்வித் திட்டத்தைத் தமிழ்நாட்டுக்குள் நுழைய விடமாட்டேன்" என்று சொன்ன ஒரே தைரியமுள்ள முதலமைச்சர் நம் முதலமைச்சர்.

இப்போது மற்ற மாநிலத்தவர்கள் எல்லாம் யோசித்துப் பார்க்கிறார்கள், எதிர்க்கிறார்கள். இப்போது ஒன்றிய அரசு ஏதாவது ஒரு திட்டம் கொண்டு வந்தது என்றால், மற்ற மாநில முதலமைச்சர்கள் பார்ப்பது தமிழ்நாட்டைத்தான். ``தமிழ்நாடு முதலமைச்சர் என்ன முடிவெடுக்கிறார்? தமிழ்நாட்டு மக்கள் இந்த முடிவுகளில் என்ன நிலைப்பாடு எடுக்கிறார்கள்?" என்பதைத்தான். அப்படிப்பட்ட ஒரு நிலைமையை, இன்று நம் முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

### ஒன்றிய அரசு எந்த நிதியும் ஒதுக்கவில்லை

சமீபத்தில் ஒன்றிய அரசு நிதிநிலை அறிக்கை (Budget) தாக்கல் செய்தார்கள். தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு எந்தவிதமான நிதியும் ஒதுக்கவில்லை. ஒன்றிய நிதி அமைச்சர் நிதிநிலை அறிக்கையை முழுமையாகப் படித்துக்கூட முடிக்கவில்லை, படித்து முடிப்பதற்கு முன்பே, தமிழ்நாட்டில் இருந்து ஒரு குரல் `பட்ஜெட் சூப்பர்". யார்? எடப்பாடி பழனிசாமி அவர்கள். நாம் முரட்டுப் பக்தர்களைப் பார்த்திருப்போம், முரட்டுத் தொண்டர்களைப் பார்த்திருப்போம், இந்தியாவிலேயே ஒரு முரட்டு அடிமையாக இன்று எடப்பாடி பழனிசாமி இருக்கிறார்.

அதனால்தான் ஒரு வாரத்துக்கு முன்னால் மதுரையில் ஒரு கூட்டம் நடந்தது. ஒன்றியப் பிரதமர் மோடி அவர்கள் வந்திருந்தார். இப்போது தேர்தல் வந்துவிட்டது என்று சொன்னால், மோடி அவர்களும் அமித்ஷாவும் குறைந்தது இன்னும் ஒரு ஐந்து ஆறு முறை வருவார்கள். இன்னும் ஒரு 40 நாட்களில் தேர்தல். எழுதி வைத்துக்கொள்ளுங்கள் எப்படியும் ஒரு ஐந்து ஆறு முறை வந்துவிடுவார்கள். நிதி வராது, திட்டங்கள் எதுவும் வராது, ஆனால் அவர்கள் இரண்டு பேர் மட்டும் வந்துவிட்டுப் போவார்கள். அதுமட்டுமல்ல, நீங்கள் எடுத்துப் பாருங்கள், வரலாற்றிலேயே முதல்முறையாக எப்போது மோடி அவர்கள் வந்தாலும் அமித்ஷா அவர்கள் வந்தாலும் தமிழ்நாட்டில் அவர்கள் இந்தியில்தான் பேசுவார்கள். எந்தக் கூட்டத்திலும் இந்தியில்தான் பேசுவார்கள். அதை யாராவது மொழிபெயர்ப்பார்கள், அதை யாரும் கேட்கவும் மாட்டார்கள், அது ஒன்றும் புரியாது, அதில் எந்தத் திட்டமும் இருக்காது, தமிழ்நாட்டுக்கு எந்தப் பிரயோஜனமும் இருக்காது. இந்த முறைதான் தேர்தல் என்பதால், முதல் முறையாக மோடி அவர்கள் ஆங்கிலத்தில் பேசி இருக்கிறார்.

### அடிமைக் கூட்டம்

மும்மொழிக் கொள்கையைத் திணிக்கப் பார்க்கிறார்கள், அவர்களுக்கு ஆங்கிலம் பிடிக்காது. ஆங்கிலம் பிடிக்காத ஒருவரை, ஆங்கிலம் பேச வைத்திருக்கிறது நம் தமிழ்நாடு, நம் முதலமைச்சர் அவர்கள். கூட்டத்தின் முகப்பில் தந்தை பெரியாரின் புகைப்படத்தை அச்சிட்டு வைத்திருந்தார்கள். அந்தச் செய்தி மோடி அவர்களுக்குச் சென்றுவிட்டது. "வருவாரா? முதலில் மாற்றுங்கள்" என்று கூறிவிட்டார்கள். எடுத்திருக்கலாம், எடுத்துவிட்டு என்ன தெரியுமா வைத்தார்கள்? பெரியாரின் புகைப்படத்தை எடுத்துவிட்டு அந்த இடத்தில் மோடியின் புகைப்படத்தை வைத்துவிட்டார்கள். இப்படி ஓர் அடிமைக் கூட்டத்தை நாம் பெற்றிருக்கிறோம்.

இப்போது கூட்டணி அமைத்திருக்கிறார்கள். இந்தக் கூட்டணியின் பெருமை நம் அனைவருக்கும் தெரியும். ஒவ்வொருவரும் எவ்வளவு புகழ்ந்து பேசியிருக்கிறார்கள் தெரியுமா? உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அ.தி.மு.க, பா.ஜ.க சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் பிரிந்துதான் இருந்தார்கள்.

அப்போது சொன்னார்கள், ``பா.ஜ.க-வை நாங்கள் இத்தனை நாட்களாகத் தூக்கிச் சுமந்தோம். 2026-இல், 2036-லும் நிச்சயமாகப் பா.ஜ.க-வுடன் கூட்டணி கிடையாது" என்று சொன்னது யார்? எடப்பாடி பழனிசாமி அவர்கள். ஆனால் அதன்பிறகு முகத்தை மூடிக்கொண்டு, நான்கு கார் மாறி, திருட்டுத்தனமாகப் போய்விட்டு வந்தது யார்? எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

இன்னொருவர் அவர்கள் கூட்டணியில் இருக்கிறார். அவர் சொன்னது, ``பா.ஜ.க-வோடு கூட்டணி வைப்பதற்கு, எடப்பாடி பழனிசாமியோடு கூட்டணி சேர்வதற்குத் தூக்கில் தொங்குவது மேலானது" என்று. யார் சொன்னது? டி.டி.வி. தினகரன். இன்று எங்கே இருக்கிறார்? அவர்கள் கூட்டணியில் இருக்கிறார்.

இன்னொருவர் சொன்னார், ``எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு ஒரு கவுன்சிலர் ஆவதற்குக்கூடத் தகுதி கிடையாது" என்று. இது யார் சொன்னது? அன்புமணி ராமதாஸ். இவற்றையெல்லாம் நாம் மக்களிடம் மீண்டும் ஞாபகப்படுத்த வேண்டும். இது எப்பேர்ப்பட்ட ஒரு மோசமான கூட்டணி அமைத்திருக்கிறார்கள் என்று பாருங்கள். எனவே வருகின்ற தேர்தல் டெல்லிக்கும் தமிழ்நாட்டுக்கும் நடக்கின்ற ஒரு தேர்தல். இதில் நாம் தமிழ்நாட்டைக் காப்பாற்றியே ஆக வேண்டியது காலத்தின் கட்டாயம். நாம் அடுத்த 40 நாட்கள் நாம் செய்கின்ற களப்பணிகளின் வாயிலாகத்தான், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குத் தமிழ்நாட்டின் உரிமைகளை நாம் காப்பாற்ற முடியும். எனவே, இங்கே வந்திருக்கும் சார்பு அணி நிர்வாகிகளான உங்களிடம் கேட்டுக்கொள்வது, அடுத்த 40 நாட்கள் களத்தில் இருந்து தொடர்ந்து செயலாற்றுங்கள் என்பதுதான்.

நிச்சயமாக நம் ஆட்சியின் சாதனைகள் நிறையவே இருக்கின்றன, அவற்றைச் சொல்லுங்கள். தைரியமாகச் சொல்லுங்கள். இன்று முதலமைச்சராகட்டும், நம் பல்வேறு அமைச்சர்களாகட்டும், சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் களத்தில் இருக்கிறோம். நான் உறுதியாகச் சொல்கிறேன். இந்தியாவில் எந்த முதலமைச்சரும் செய்யாத சாதனை, வரலாற்றிலேயே செய்திருக்க மாட்டார்கள். ஒவ்வொரு நாளும் மக்களோடு மக்களாகக் களத்தில் நிற்கிறார், மக்களைச் சந்திக்கிறார். ஏன்? நிச்சயமாக நாம் செய்திருக்கக்கூடிய சாதனைகள் தரும் தைரியம்தான். மக்கள் கொடுக்கும் அந்த வரவேற்புதான் காரணம். மக்கள் சிரித்த முகத்துடன் வரவேற்கிறார்கள்.

ஒவ்வொரு அணிக்கும் ஒரு அட்வான்டேஜ் இருக்கிறது. விளையாட்டு மேம்பாட்டு அணிக்கு விளையாட்டு நடக்கக்கூடிய பகுதிகளில் இருக்கக்கூடிய விளையாட்டு வீரர்கள், அவர்களோடு தொடர்பில் இருங்கள். அவர்கள் இளைஞர்கள், அவர்களுக்குப் புரிய வையுங்கள். தி.மு.க-வின் வரலாறு என்ன? கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாடு எப்படி இருந்தது? இந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு எவ்வளவு சாதனை செய்திருக்கிறது? விளையாட்டுத் துறையில் எவ்வளவு சாதனை செய்திருக்கிறோம்? என்பதை எடுத்துச் சொல்லுங்கள்

### 300 வீரர்களுக்கு அரசு வேலை

குறிப்பாக 300 விளையாட்டு வீரர்களுக்குத் தமிழ்நாட்டு வரலாற்றிலேயே முதல் முறையாக அரசு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அ.தி.மு.க-வின் 10 ஆண்டு ஆட்சியில் 3 சதவிகித விளையாட்டு ஒதுக்கீட்டில் (Sports Quota) எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கொடுத்தார்கள்? இரண்டு பேருக்கு. 10 ஆண்டுகளில் இரண்டு பேருக்கு. நாம் இரண்டே ஆண்டுகளில் 300 பேருக்குக் கொடுத்திருக்கிறோம். நான் பொறுப்பேற்ற பிறகு, அந்த முயற்சியில் ஈடுபட்டோம். இரண்டே ஆண்டுகளில் 300 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பைக் கொடுத்திருக்கிறோம்.

இப்படிப் பல்வேறு உள்கட்டமைப்புகள். 10 ஆண்டுக்கால அ.தி.மு.க ஆட்சியில் எவ்வளவு தெரியுமா செலவு செய்திருக்கிறார்கள்? விளையாட்டுக் கட்டமைப்புகளுக்கு 300 கோடி ரூபாய். நம் திராவிட மாடல் அரசு இந்த ஐந்து ஆண்டுகளில் எவ்வளவு தெரியுமா? 700 கோடி ரூபாய் நம் விளையாட்டுக் கட்டமைப்புக்காக ஒதுக்கியிருக்கிறோம்.

மகளிர் அணியைப் பற்றி உங்களுக்குச் சொல்லவே தேவையில்லை. நாமெல்லாம் வாசல் வரைக்கும்தான் போக முடியும். ஆனால், மகளிர் நீங்கள் சமையல் அறை வரைக்கும் சென்று உரிமையோடு அவர்களிடம் பேசலாம். தகவல் தொழில்நுட்ப அணி சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறீர்கள்.

ஆனால், இன்னும் அதிகமாக நீங்கள் களத்தில் இறங்கிச் சிறப்பாகச் செயல்பட வேண்டும். நீங்களே யூடியூப் சேனல்கள் ஆரம்பிக்கலாம், அதெல்லாம் பெரிய செலவு கிடையாது. மக்களிடம் பேசுங்கள். நம் அரசின் திட்டங்களை, இந்தச் சாதனைகளை அட்டைகளாக (Cards) வெளியிடுங்கள். வாட்ஸ்ஆப்பில் இன்னும் அதிகமாகச் செயல்படுங்கள். இப்படி ஒவ்வொரு அணியும் சிறப்பாக நீங்கள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் ஒவ்வொரு அணியாகப் பிரிந்திருக்கிறோம். இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி என்று பிரிந்திருக்கிறோம். ஆனால், ஒன்றை மட்டும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அடுத்த 40 நாட்கள் அனைவரும் ஒரே அணி, அது `கலைஞர் அணி, தலைவர் அணி' என்பது மட்டும்தான் நம் மனதில் இருக்க வேண்டும். எனவே நீங்கள் நிச்சயமாகச் செய்து காட்டுவீர்கள் என்ற நம் பிக்கை எனக்கு இருக்கிறது.

தலைவர் நமக்குக் கொடுத்திருக்கும் இலக்கு 200. "வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு" என்று தலைவர் சொல்லியிருக்கிறார். ஆனால், எனக்கு நிச்சயமாக நம்பிக்கை இருக்கிறது, நிச்சயமாக அடுத்த 40 நாட்கள் களத்தில் இறங்கி நம் பிரச்சாரத்தை, தேர்தல் பணியை முறையாகச் செய்தோம் என்றால் 200 இல்லை, 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நிச்சயமாக, திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறும். ஏழாவது முறையாக நாம் ஆட்சி அமைப்போம். நம் தலைவர் மீண்டும் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் அமர்வார். அதற்கு நம் உழைப்பு மிக மிக முக்கியம். அதை நிச்சயமாக நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

### மிகச்சிறந்த கூட்டணி

இன்னும் 25 நாட்களில் மீண்டும் உங்களை எல்லாம் சந்திக்க, பிரச்சாரத்துக்கு வருவேன். அதற்குள் இந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய மூன்று தொகுதியிலும் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக வெற்றி என்கிற நிலையை நீங்கள் உருவாக்கி வைத்திருக்க வேண்டும். தலைவர் மிகச்சிறந்த கூட்டணியை உருவாக்கி வைத்திருக்கிறார். இந்த தூத்துக்குடி மாவட்டத்துக்கு என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் செய்து கொடுத்துவிட்டார். இந்தக் கூட்டணி அமையக்கூடாது என்று எவ்வளவோ பேர் முயற்சி செய்தார்கள், ஆனால், அதையெல்லாம் ஒரே நாளில் முடித்துவிட்டார் நம் தலைவர் அவர்கள்.

எனவே இவற்றையெல்லாம் மக்களிடம் கொண்டு சேருங்கள். மீண்டும் நம் தி.மு.க ஆட்சி ஏன் அமைய வேண்டும், திராவிட மாடல் ஆட்சி ஏன் அமைய வேண்டும், அப்படி அமைந்தால் நம் தலைவர் என்னவெல்லாம் செய்வார் என்கிற அந்தத் தேர்தல் வாக்குறுதிகளை நீங்கள் உள்வாங்கி மக்களிடம் கொண்டு சேருங்கள் என்று கூறிவிட்டு, வந்திருக்கக்கூடிய அனைவருக்கும் என்னுடைய நன்றி.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் அனிதா ராதாகிருஷ்ணன், கீதாஜீவன், சட்டமன்ற உறுப்பினர்கள் சண்முகையா, மார்க்கண்டேயன், மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, கழக இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ரகு, சார்பு அணிகளின் நிர்வாகிகள் மருத்துவர் வெற்றிவேல், ஜெசி பொன்ராணி, குமரி சங்கர், வழக்கறிஞர் மனோஜ், சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர்கள் மருத்துவர் சுரேஷ், பெர்னார்ட் போஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மாடசாமி, செந்தூர் மணி, பிரம்மசக்தி, மாவட்டக் கழக நிர்வாகிகள் அருணாச்சலம், வி.பி.ராமநாதன், ஆறுமுகப் பெருமாள், ஜெயக்குமார் ரூபன், ஜெயத்தங்கம் பிரேமா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராமஜெயம் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.